## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.II,MANNARGUDI**

**C.C.No.389/2022 P.W.1 (LW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **குணசேகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | வடிவேல் | **Calling** | : | |
| **Village** | : | தலையாமங்கலம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 62 |

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி என் தம்பி. 2வது எதிரி அவரது மகன். அவர்கள் மீதுதான் நான் இந்த வழக்கின் புகாரினை கொடுத்தேன்.

2. எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையில் ரொம்ப நாட்களாக இடம் சம்மந்தமான பிரச்சினை இருக்கிறது. 05.10.2022ம் தேதியன்று காலை 08.15 மணியிருக்கும் வீட்டுக் கொல்லையில் பைப்படியில் நான் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தேன். அப்போது சௌந்தரராஜன் அவரது வீட்டிற்கு பின்புறத்தில் கீற்றுப் போட்டுக்கொண்டிருந்தார். திடீரென என்னை தேடிவயா மவனே குச்சிக்காரி மவனே என்று கெட்ட வார்த்தைகளை சொல்லி என்னை பேசினார். நான் தண்ணீர் பிடித்துக்கொண்டு அன்னாந்து பார்க்கும்போது செங்கல்லால் சௌந்தரராஜன் என்னை அடித்தார். என் நெற்றியின் சோற்றுக்கை பக்கம் காயம் ஏற்பட்டது. (சாட்சி அந்த காயத்தினை விரலைக்கொண்டு அடையாளம் காட்டுகிறார்). சௌந்தரராஜன் என்னை அடித்துக்கொண்டிருக்கும்போது என் மனைவி இந்திரா அங்கு ஓடிவந்தார். வீரமணி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து என் மனைவியை அடித்தார். வீரமணி அடித்ததில் என் மனைவிக்கு மூக்கு கிழிந்தது. இரண்டு கன்னம் பக்கத்திலும் அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. நாங்கள் இருவரும் சத்தம் போடவும் என் மருமகள் சுகன்யாவும் மகன் மணிகண்டனும் ஓடிவந்தார்கள். அவர்களை பார்த்ததும் ஆஜர் எதிரிகள் இருவரும் இரண்டு இரும்புக்கம்பிகளை எடுத்து வந்து இதான் சந்தர்ப்பம் உங்களை எல்லாம் கொல்லாமல் விடமாட்டேன் என்று பேசினார்கள். ஊர் ஜனங்கள் எல்லாம வருவதை பார்த்தவுடன் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பிறகு என் மகன் எங்களை மன்னார்குடி ஜி.ஹெச்சிற்கு கொண்டு வந்து சேர்த்தார். அங்கு வந்த போலிசார் என்னை விசாரித்தார்கள் நானும் கம்ப்ளைண்ட் கொடுத்தேன்.

3. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதனை தலையாமங்கலம் காவல்நிலையத்திலிருந்து போலிசார் வந்தபோது கொடுத்தேன். அதிலுள்ள

கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. என்னை எதிரிகள் தாக்க பயன்படுத்திய செங்கற்களை அடையாளம் காட்ட முடியுமா என்றால் - முடியும். (செங்கற்களை பார்த்த சாட்சி, செங்கற்களால் தான் அடித்தார்கள் ஆனால் அது கொஞ்சம் பெரிய சைசில் இருக்கும் என்று கூறுகிறார்). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

5. சம்பவம் முடிந்தபிறகுதான் ஊர்க்காரர்கள் வந்தார்கள். அதனால், என் வீட்டு நபர்களை தவிர வேறு யாருக்கும் இந்த சம்பவம் நேரிட்டு தெரியாது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு கையொப்பம் போடத் தெரியுமா என்றால் - தெரியும். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் - என்னுடையதுதான். நான் வ.குணசேகரன் என்றுதான் கையொப்பம் செய்வேன் என்றால் - சரிதான். நான் இ.வ.குணசேகரன் என கையொப்பம் செய்வேன் என்றால் - செய்யமாட்டேன்.

2. மருத்துவமனைக்கு சென்றபோது எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து மருத்துவர்களிடம் விவரங்களை நான் சொன்னேனா அல்லது எனது மகன் சொன்னாரா என்றால் - என் மகன் சொன்னார் பிறகு நான் சொன்னேன். மருத்துவரிடம் எத்தனை நபர்கள் அடித்ததாக கூறினேன் என்றால் - 2 நபர்கள் அடித்ததாக கூறினேன்.

3. என் வீட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் இடையில் இடைவெளி உள்ளது என்றால் - சரிதான். எதிரிகள் அவரது வீட்டிற்கு கீற்று போடுவதில் எனக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை என்றால் - சரிதான்.

4. நான் கையொப்பம் போட்டுக்கொடுத்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. அதில் எதிரி அரவது வீட்டில் கீற்றுப் போட்டுக்கொண்டிருந்தபோது நான் போய் ஏன் பிரச்சினை உள்ள இடத்தில் கீற்று போடுகிறாய் என்று கேட்டதால் தான் வழக்கு சம்பவம் என்றால் - சரியல்ல.

5. சண்டை நடக்கும்போது நான், என் மனைவி, என் மகன், என் மருமகள் நால்வரும் இருந்தோம் என்றால் - சரிதான். என் வீட்டிற்கு அருகில் உள்ளவர்கள் யாருக்கும் இந்த சம்பவம் தெரியாது என்றால் - சரிதான்.

6. நான் சொல்வதுபோன்று நான், என் மனைவி, என் மகன், என் மருமகள் நால்வரும் சேர்ந்து எதிரியின் வீட்டிற்கு சென்று அவர் கீற்று போடுவதை தடுக்க சென்றபோதுதான் தான் அங்கு நீட்டிக்கொண்டிருந்த மரத்தில் கிழித்து காயம் ஏற்பட்டது என்றால் - சரியல்ல.

7. எந்த சூழ்நிலையிலாவது தலையாமங்கலம் காவலர்கள் என்னிடம் எந்தவித கல்லையும் காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் - சரிதான். போலிசார் கல்லை எடுத்ததாக சொன்னார்கள் ஆனால் காண்பிக்கவில்லை.

8. எதிரியின் வீடு மாடி வீடு என்றும் என் தம்பியான எதிரி மாடி வீடு கட்டிவிட்டார் என்பதால் எனக்கு பொறாமை என்றால் - சரியல்ல. நான் என் புகாரில் பைப்படியில் தகராறு என்று சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன்.

9. நான் சொல்வதுபோன்று சம்பவம் இல்லை என்றும் எதிரிகள் அவர்களது வீட்டில் அவர்கள் கீற்று போட்டுக்கொண்டிருந்தபோது நாங்கள் வலிய சென்று பிரச்சினையை உருவாக்கி அதனால் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும் எங்களுக்கு ஏற்பட்ட காயத்தினை பயன்படுத்தி எதிரிகளின் மீது இந்த வழக்கினை உருவாக்கியுள்ளேன் என்றால் - சரியல்ல.

10. உண்மையில் நான் சொல்வதுபோன்று சம்பவம் இல்லை என்றும் நாங்கள் வலிய சென்று பிரச்சினையை உருவாக்கியதால் பிரச்சினையை பார்த்த யாரும் சமாதானம் செய்யவில்லை என்றும் எங்களால் உருவாக்கப்பட்ட வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றதால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.II,MANNARGUDI**

**C.C.No. 389/2022 P.W.2 (LW6)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **இந்திரா** | **Caste** | : | |
| **Father's Name** | : | குணசேகரன் | **Calling** | : | |
| **Village** | : | தலையாமங்கலம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 48 |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 குணசேகரன் எனது கணவர். ஆஜர் எதிரிகளின் மீது என் கணவர் புகார் கொடுத்தார். எங்களுக்குள் வேலி பிரச்சினை உள்ளது.

2. (எனக்கு வருசம், மாதம், தேதி சொல்ல தெரியாது என்று சாட்சி சிரித்துக்கொண்டே கூறுகிறார். நான் படிக்கவில்லை.) காலை 08.30 மணியிருக்கும் ஆஜர் எதிரிகள் அவர்கள் வீட்டில் கீற்றுப் போட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த இடம் எங்கள் வீட்டிற்குள் வரும். என் வீட்டுக்காரர் அவர்களிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். நீ எப்படி கேட்கிறது என்று சௌந்தரராஜன் என் கணவரை செங்கல்லால் அடித்தார். என் கணவருக்கு நெற்றியில் அடிப்பட்டது. நான் வீட்டிலிருந்து ஓடிவந்தேன். வீரமணி இரண்டு செங்கல்லால் என்னை ஒரே அடியாக அடித்தார். எனக்கு மூக்கு அடிப்பட்டு விழும் நிலையிலிருந்தது. கன்னங்களின் எலும்பு முறிந்துவிட்டது. சௌந்தரராஜன் இந்த சம்பவத்திற்கு முன்பே என்னை இதே தகராறில்தான் அடித்து என் கையில் காயம் ஏற்பட்டு பிளேட்டும் பொருத்தப்பட்டுள்ளது. (சாட்சி தனது இடது முன்னங்கையில் உள்ள காயத்தின் தழும்பினை காட்டுகிறார்). என்னுடைய மருமகள் சுகன்யாவும் மகன் மணிகண்டனும் எங்களை மன்னார்குடி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனார்கள். அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவமனைக்கும் அழைத்து போனார்கள். என் மூக்கை தான் அறுவை சிகிச்சை செய்யமுடியும் என்றும் முகத்தினை அறுவை கிசிச்சை செய்யமுடியாது என்று சொன்னார்கள். பிறகு அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது. இந்த சம்பவம் எங்களை தவிர வேறு யாருக்கும் தெரியாது.

2. செங்கல்லை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் - அடித்தது தான் தெரியும். சரியாக அடையாளம் காட்ட தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் - வீட்டில்தான் விசாரித்தார்கள். நான் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது எனக்கு

சுயநினைவில்லை என்றால் - சரிதான். எனக்கு அடிப்பட்ட விவரத்தினை என் மருமகளும் என் மகனும் தான் மருததுவரிடம் சொன்னார்கள் என்றால் - சரிதான். என் மகனுக்கும் என் மருமகளுக்கும் நடைப்பெற்ற சம்பவம் நேரிடையாக தெரியாது என்றால் - சரிதான். ஆனால் மருததுவரிடம் நடந்த சம்பவம் குறித்து என் மகனும் என் மருமகளும் தான் விவரம் சொன்னார்கள் என்றால் - சரிதான்.

2. எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையில் வேலி தகராறுதான் இருந்து வந்தது என்றால் - சரிதான். வீடு என்பது எதிரிக்கு சொந்தமானது என்றால் - சரிதான். எதிரியின் வீட்டில் எதிரி கீற்று போட்டார்கள் என்றும் நானும் என் கணவரும் எதிரிகளிடம் சென்று ஏன் கீற்று போடுகிறாய் என தகராறு செய்தோம் என்றால் - சரியல்ல.

3. வழக்கில் சம்மந்தப்பட்ட இடத்தினை என் மாமனார் அவரது பேரனான வீரமணிக்கு எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் - சரிதான். நாங்கள் தான் முன் விரோதம் காரணமாகவும் காழப்புணர்ச்சியின் காரணமாக எதிரிகளிடம் தொடர்ந்து பிரச்சினை செய்து வருகிறோம் என்றும் அதனால் தான் நாங்கள் சம்பவத்தின் உண்மை நிலையை மறைத்து சம்பவத்தின்போது 2 ஆண் மற்றும் 1 பெண் என திருமணமாகாத எதிரிகளின் மகளையும் இணைத்து மருத்துவரிடம் பொய்யாக 3 நபர்கள் தாக்கினார்கள் என கூறியுள்ளார்கள் என்றால் - சரியல்ல,.

4. சம்பவ தினத்தன்று எதிரிகளிடம் நானும் என் கணவரும் வீண் தகராறு செய்து எதிரிகளை நாங்கள் தாக்க முற்பட்டபோது அங்கிருந்த கம்பு மற்றும் கழியின் மீது மோதி எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் - சரியல்ல. அதனால் தான் நான் மருததுவமனையில் 22 நாட்கள் இருந்தபோது போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் - சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கில் அக்கம் பக்கத்தில் உள்ள யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் - சரியல்ல.

5. சம்பவ தினத்தன்று நானும் என் கணவரும் வலிய சென்று எதிரிகளிடம் பிரச்சினையை உருவாக்கி அதனால் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.II,MANNARGUDI**

**C.C.No. 389/2022 P.W.3 (LW2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மணிகண்டன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | குணசேகரன் | **Calling** | : | |
| **Village** | : | தலையாமங்கலம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 29 |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1/ நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 எனது அப்பா மற்றும் அம்மா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது அப்பாவின் சகோதரர் மற்றும் அவரது மகன். எங்களுக்குள் இடப்பிரச்சினை ரொம்ப நாட்களாக இருந்தது.

2. என் அப்பா தான் இந்த வழக்கின் புகாரினை கொடுத்தார். கடந்த 05.10.2022ம் தேதியன்று காலை 08.15 மணியளவில் ஆஜர் எதிரிகள் என் அம்மாவையும் அப்பாவையும் அடித்துவிட்டார்கள். நானும் என் மனைவியும் அப்போது வீட்டில் இருந்தோம். என் அம்மாவும் அப்பாவும் கத்தினார்கள். நாங்கள் வெளியே ஓடிவந்து பார்த்தோம். அப்போது என் அப்பாவையும் அம்மாவையும் ஆஜர் எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். நான் கிட்டபோகும்போது என் அப்பாவிற்கு நெற்றியில் காயமிருந்தது. நான் மேலும் கிட்டபோனேன். வீரமணி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து என் அம்மாவை முகத்தில் அடித்தார். நானும் கத்தினேன். எதிரிகள் இருவரும் வீட்டிற்குள் ஓடிபோய் கம்பியை எடுத்துவந்து உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சத்தம் போட்டார்கள். என் அப்பா(அ.சா.1) மயக்கம் போட்டு கீழே விழுந்தார். அம்மா சத்தம் போட்டார்கள். இந்த சம்பவம் என் வீட்டுக் கொல்லைப்புறத்தில் நடந்ததால் வேறு யாருக்கும் தெரியாது. நான்தான் மன்னார்குடி ஜி.ஹெச்சிற்கு அழைத்துப் போனேன். என் அம்மாவிற்கு பலத்த அடிப்பட்டதால் மூக்கின் நரம்பு கட்டானதால் அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருததுவமனைக்கு கொண்டு போகச் சொன்னார்கள் அ ழைத்துப் போனேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் - மன்னார்குடி அரசு மருத்துவமமைனயில் அன்றைய தினமே விசாரித்தார்கள். மருத்துவர்களிடம் எப்படி யாரால் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தினை நான்தான் சொன்னேன் என்றால் - சரிதான்.

2. எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் முன்விரோதம் உள்ளது என்றால் - சரிதான். முன்விரோதத்தின் காரணமாக தான் நான் 2 ஆண் மற்றும் 1 பெண் அடித்ததாக கூறியுள்ளேன் என்றால் - சரிதான். அதேபோன்று வழக்கிற்காக எதிரிகளை சிக்க வைக்க வேண்டும் என்பதற்காக கல் மற்றும் அருவாளால் தாக்கியதாக நான்தான் மருத்துவரிடம் கூறினேன் என்றால் - சரிதான். நான் எதிரிகளின் மீது விரோதம் கொண்ட சாட்சி என்பதால் கூடுதலான தகவல்களை மருததுவர்களிடம் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் - சரியல்ல.

3. நான் போலிசாரின் விசாரணையில் எனது அம்மா அடிப்பட்டதை பார்த்ததாக கூறியுள்ளேன் என்றால் - சரிதான். எதிரிகளின் வீட்டில் கீற்று போட்டதற்கு என் அப்பா போய் கேட்டதால் தான் பிரச்சினை என்றால் - சரிதான். இந்த இடம் பிரச்சினை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் எதுவும் இல்லை என்றால் - சரிதான்.

4. சம்பவத்தன்று எங்களது பெற்றோர்கள் தான் வலிய சென்று பிரச்சினையை உருவாக்கினார்கள் என்றும் எதிரிகளை தாக்க முற்படும்போது அ ங்கிருந்த மூங்கில்கள் மற்றும் கீற்று போடுவதற்கான தளவாட சாமான்கள் கீழே கிடந்தவற்றில் மோதி அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றும் அதனால் தான் நான் உண்மை நிலையை மறைத்து மருத்துவர்களிடம் கூடுதலான விவரங்களையும் பொய்யான விவரங்களையும் கூறியுள்ளேன் என்றால் - சரியல்ல. சம்பவத்தினை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றும் என் பெற்றோருக்கு ஆ தரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.II,MANNARGUDI**

**C.C.No. 389/2022 P.W. 4 (LW3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சுகன்யா | **Caste** | : | |
| **Father's Name** | : | மணிகண்டன் | **Calling** | : | |
| **Village** | : | தலையாமங்கலம் | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 20 |

**எதிரிகள் 1, 2 ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.10.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 ,2 என் மாமனார் மற்றும் மாமியார். அ.சா.3 என் கணவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களுக்குள் இடப்பிரச்சினை உள்ளது எனக்கு தெரியும்.

2. இடப்பிரச்சினை நடந்துக்கொண்டிருக்கும்போது 05.10.2022ம் தேதியன்று காலை 08.15 மணியிருக்கும் எதிரிகள் பிரச்சினை உள்ள இடத்தில் கீற்று போட்டர்கள். என் மாமனார் ஏன் கீற்று போடுகிறீர்கள் என்று கேட்டபோது எதிரிகள் கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள். நானும் என் கணவர் அ .சா.3ம் வெளியே வந்து பார்த்தோம். என் மாமனாருக்கு நெற்றியில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது. சௌந்தரராஜன்தான் செங்கல்லால் அடித்தார். அவர் அடிக்கும்போது நானும் என் கணவரும் வீட்டிற்குள்ளிருந்து ஓடிவந்தோம். என் அத்தை அ.சா.2 ஓடிவந்தபோது அவரையும் (2வது எதிரி) வீரமணி செங்கல்லால் அடித்தார். மூக்கில் காயம் ஏற்பட்டது. மூக்கு உடைந்துவிட்டது. நானும் என் கணவரும் என் மாமனார் மாமியாரை அழைத்துச் செல்லும்பே ாது எதிரிகள் கம்பியை காட்டி இன்னைக்கி தப்பிச்சிட்டீங்க என்னைக்கா இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொன்னார்கள். மன்னார்குடி ஜி-ஹெச்சில் கொண்டு அவர்களை சேர்த்தோம். போலிசார் என்னையும் விசாரித்தார்கள். எங்கள் வீட்டுக் கொல்லையில் இந்த சம்பவம் நடைப்பெற்றது. இந்த சம்பவம் எங்களை தவிர வேறு யாருக்கும் தெரியாது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் - இல்லை. வழக்கு சம்பவம் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் - சரியல்ல. நேரிட்டு பார்த்தேன். சம்பவத்தன்று நான், என் மாமனார், மாமியார், என் கணவர் நால்வரும் சத்தம் போட்டும் யாரும் வரவில்லை என்றால் - சரிதான்.

2. சம்பவ இடம் தொடர்பாக என் மாமனாரின் தந்தை வடிவேல் என்பவர் 2வது எதிரி வீரமணி என்பவருக்கு பேரன் என்பதன் அடிப்படையில் தான செட்டில்மெண்ட்டாக கொடுத்துவிட்டார் என்றால் - அது எனக்கு தெரியாது. மாடி வீடு எதிரிகளின் வீடுதான் என்றால் - சரிதான்.

3. எதிரிகளின் வீட்டில்தான் எதிரிகள் கீற்று போட்டார்கள் என்றால் - சரிதான். என் மாமனார் மாமியார் தான் வலிய சென்று எதிரிகளிடம் பிரச்சினையை உருவாக்கி எதிரிகளை தாக்க முற்பட்டாரக்ள் என்றும் அபபோது கீற்று போடுவதற்காக உள்ள தளவாட சாமான்களில் மோதிக்கொண்டு அதனால் ஏற்பட்ட காயத்தினை கொண்டு எதிரிகளின் மீது பொய்யான வழக்கினை உருவாக்கியுள்ளார்கள் என்றால் - சரியல்ல. சம்பவத்தின்போது எதிரிகளின் திருமணமாகாத பெண்ணையும் இணைத்து என் கணவர் மருததுவரிடம் விவரம் சொல்லியுள்ளார் என்றால் - சரிதான்.

4. சௌந்தரராஜன்தான் கம்பியை வைத்திருந்தார் என்றால் - சரிதான். அந்த கம்பி எவ்வளவு நீளம் கொண்டது என்றால் - எனக்கு தெரியவில்லை. நான், சம்பவத்தினை நேரில் பார்க்காத காரணத்தினால் தான் கம்பியின் நீளம் எனக்கு தெரியவில்லை என்றும் போலிசார் என்னை விசாரிக்காத நிலையில் என் மாமனார் மாமியாருக்கு ஆதரவாக பொய்யான ஒரு வழக்கில் பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.